மாலை முரசு

பக்கங்கள் 17+3

## சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக சந்திரகுப்த கைது!

ஜூலை 8 வரை விளக்கமறியல்

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த இலஞ்சம் 02▶



முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 12 வியாழக்கிழமை 26.06.2025 | அதிர்வு 327

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# மேலும் 3 எலும்புக்கூடுகள் இன்று செம்மணியில் மீட்பு

## அவற்றில் ஒன்று கைக்குழந்தையுடையது

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் இன்று கைக்குழந்தையின் எலும்புக் கூடு உட்பட 3 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு இன்று காலை ஆரம்பமானது. 02▶

# கெஹலிய குடும்பத்தின் மீது மொத்தம் 43 குற்றச்சாட்டுகள்

## கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று குற்றப்பத்திரிகை தாக்கல்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள்ஐந்துபேருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணையம் இன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது.

பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ரம்புக்வெல, அவரது மனைவி, மூன்று மகள்கள் மற்றும் ஒரு மருமகன் மீது இலஞ்சம் மற்றும் 02▶



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# அர்ச்சுனா எம்.பிக்கு எதிரான வழக்கின் விசாரணை முடிவுக் கட்டத்தை நோக்கி





யாழ்ப்பாணம் மாவட்ட சுயேச்சைக் குழு நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கத் தகுதியற்றவர் எனத் தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான விசாரணையை நீதிமன்றம் இன்று ஆரம்பித்தது.

மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளின் வாதங்களையும் அரசு தரப்பு வாதங்களையும் செவிமடுத்த நீதிமன்றம், எதிர் மனுதாரரான அர்ச்சுனா இராமநாதனின் சட்டத்தரணிகள் வாதம் செய்வதற்கு வசதியாக வழக்கை ஜூலை இரண்டாம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

அரசு தரப்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவர்த்தன மனுதாரரின் நிலைப்பாட்டை ஆதரித்து வாதங்களை முன்வைத்தார்.

வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் இன்னமும் அரச வைத்திய சேவையில் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட அதிகாரியாகத் தொடர்கின்றார். அரச பதவியை விட்டு சட்ட ரீதியாக விலகாத நிலையில் அவர் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதோ, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதோ சட்ட ரீதியான தவறு என்று அவர் சுட்டிக் காட்டினார்.

மனுதாரரான ஓஷாலா ஹேரத் சார்பில் மனுவைச் சமர்ப்பித்து வாதிட்ட சட்டத்தரணி என்.குமரகுருபரன் அஷோக்பரன் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தகுதி இல்லாத எதிர் மனுதாரர் தொடர்ந்தும் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பதற்கு எதிராக நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரையில் இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கவும் கோரினார்.

மேன்முறையிட்டு நீதிமன்ற நீதியரசர்கள் மாயாதுன்ன கொரயா, மஹேன் கோபல்லாவ ஆகியோரைக் கொண்ட ஆயம் இந்த வழக்கை விசாரித்து வருகின்றது.

வருகின்ற ஜூலை 2 ஆம் திகதியோடு பெரும்பாலும் வழக்கு விசாரணை முடிவுற்று தீர்ப்புக்காக அது ஒத்தி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கெஹலிய...**

ஊழல் தடுப்பு ஆணையம் 43 குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்துள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணையத்தால் அவர்களின் சொத்துக்கள் பற்றிய விசாரணைகள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் சமீபத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்பது தெரிந்ததே.

**சுகாதார...**

மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை எதிர்வரும் ஜூலை மாதம் 8ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் இன்று மாலை உத்தரவிட்டுள்ளார்.

ஜனக ஸ்ரீ சந்திரகுப்த வாக்குமூலம் வழங்குவதற்காக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று காலை முன்னிலையாகியிருந்த போது கைது செய்யப்பட்டிருந்தார்.



**மேலும் 3...**

இன்று கைக்குழந்தையின் எலும்புக்கூடு உட்பட 3 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதுவரை செம்மணி மனிதப் புதைகுழியில் 22 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் செம்மணி மனிதப் புதைகுழியை நேரில் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



### மும்முனைப் போட்டியில்

# கரைதுறைப்பற்று பிரதேச சபை ஆட்சி அதிகாரம் தமிழரசு வசம்

## தவிசாளராக சின்னராசா லோகேஸ்வரன் தெரிவு

(பா.சதீசன்)

**முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியுள்ளது.**

**அந்தப் பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சின்னராசா லோகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.**

**நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் ஆட்சி அமைப்பதற்காக எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் வாக்கெடுப்பு மூலமாக தவிசாளர், உப தவிசாளர் தெரிவு இடம்பெறுவதற்காக இன்றைய தினம் நாள் குறிக்கப்பட்டிருந்தது.**



இன்று காலை 8:30 மணிக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர், உப தவிசாளருக்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது பெரும்பாலான உறுப்பினர்கள் பகிரங்க வாக்கெடுப்பைத் தேர்வு செய்திருந்தனர்.

தவிசாளர் தெரிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெற்றது.

21 உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொண்ட நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் 11 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் தொம்மைப்பிள்ளை பவுள்ராஜ் 4 வாக்குகளையும் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் இமக்குலேற்றா புஸ்பானந்தன் 5 வாக்குகளையும் பெற்றனர்.

வாக்களிப்பின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் மகாதேவா குணசிங்கராசா நடுநிலை வகித்தார்.

இதனடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

இதேவேளை, உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் யோகேஷ்வரன் அனோஜன், சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற உறுப்பினர் வல்லிபுரம் வசந்தராசா ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டு வாக்கெடுப்பு இடம்பெற்றது

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் யோகேஸ்வரன் அனோஜன் 9 வாக்குகளையும், சுயேச்சைக் குழு உறுப்பினர் வல்லிபுரம் வசந்தராசா 6 வாக்குகளையும் பெற்றுக்கொள்ள ஆறு உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

இதனடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் யோகேஸ்வரன் அனோஜன் உப தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.



# ஜூலை 7 முதல் கல்கிசை - காங்கேசன்துறை இடையே தினசரி குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி ரயில் சேவை

## யாழ். பிரதான ரயில் நிலைய அத்தியட்சகர் பிரதீபன் தகவல்

(எஸ்.நிதர்ஷன்)



இதுவரை காலமும் வார இறுதி நாள்களில் சேவையை முன்னெடுத்து வரும் குளிரூட்டப்பட்ட நகர் சேர் கடுகதி ரயில் சேவை எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் தினசரி சேவையாக கல்கிசையில் இருந்து காங்கேசன்துறை வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலைய அத்தியட்சகர் ரீ.பிரதீபன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு இன்று கருத்துக் கூறுகையில்,

“பொதுமக்கள் ரயில்வேத் திணைக்களம் மற்றும் துறைசார் தரப்பினிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்தச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இந்த ரயில் தனது சேவையை முன்னெடுத்துவந்தது.

இந்நிலையில் எதிர்வரும் 7 ஆம் திகதிமுதல் கல்கிசை ரயில் நிலையத்தில் இருந்து காலை 5.15 மணிக்கு தனது சேவையை முன்னெடுப்பதுடன் கொழும்பு கோட்டையில் இருந்து காலை 5.45 மணிக்கு யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணிக்கும்.

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை முற்பகல் 1.49 இற்கு அது வந்தடையும். அதன்பின்னர் காங்கேசன்துறையை நண்பகல் 12.13 இற்குச் சென்றடையும்.

மீண்டும் பிற்பகல் 1.30 இற்கு காங்கேசன்துறையில் இருந்து தனது பயணத்தை ஆரம்பிக்கும் அந்த ரயில் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இருந்து பிற்பகல் 2.12 இற்குப் புறப்பட்டு கொழும்பு கோட்டையை முன்னிரவு இரவு 8.33 சென்றடையும்.

அதேவேளை, கல்கிசையை முன்னிரவு இரவு 8.55 இற்குச் சென்றடையும்.

இந்த ஒழுங்கில் இந்தச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேநேரம் இந்தக் கடுகதி ரயில் சேவைக்கான ஆசன முற்பதிவுகள் அடுத்த ஒருசில தினங்களில் மேற்கொள்ள முடியும்.

அதனை ரயில்வே திணைக்களத்தின் அதிகாரபூர்வ இணையத்திலும் முன்னெடுக்க முடியும்.

இதேவேளை, இதுவரை காலமும் காலை 5.45 மணிக்குக் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்ட யாழ். தேவி ரயில் எதிர்வரும் 7 ஆம் திகதிமுதல் காலை 6.35 மணிக்குத் தனது சேவையை ஆரம்பிக்கும்.” – என்றார்.

# பூஸா சிறைக்கூண்டினுள் தூக்கில் தொங்கிய கைதி ஒருவர் வைத்தியசாலையில் உயிரிழப்பு

## மரணத்தில் சந்தேகம் என்கின்றனர் பொலிஸார்





பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் சிறைக்கூண்டினுள் இருந்து தூக்கிட்ட நிலையில் சிறைச்சாலை அதிகாரிகளால் மீட்கப்பட்டதையடுத்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த கைதியே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் படுகாயம்



அநுராதபுரம் – திரப்பனை, கல்குலம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய நபர் மிஹிந்தலை பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், துப்பாக்கிச்சூட்டை நடத்தியது யார் என்பது இன்னும் கண்டறியப்படாத நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# செம்மணியில் அரசியல்வாதிகள் சிலரை வெளியேற்ற முற்பட்ட இழிசெயலை நீதிக்காகப் புதைகுழியில் காத்திருக்கும் ஆன்மாக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் காட்டம்



"யாழ். செம்மணியில் நடைபெற்ற அணையா விளக்கு எழுச்சிப் போராட்டத்தின் இறுதி நாளன்று இடம்பெற்ற அரசியல்வாதிகள் சிலருக்கு எதிரான அநாகரிக வசை பாடல்கள் தமிழ்ச் சமூகத்தை வெட்கித் தலைகுனிய வைத்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரை எதிர்பார்த்து உணர்வெழுச்சியுடன் நடந்து கொண்டிருந்த போராட்டத்தின் செல்திசையை மடைமாற்றுவது போன்று அங்கு வந்திருந்த சிலர் அரசியல்வாதிகள் சிலருக்கு எதிராக மோசமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு அவர்களைப் போராட்டத்திடலில் இருந்து வெளியேற்றும் இழிசெயலில் ஈடுபட்டிருந்தனர். இதனை நீதிக்காகப் புதைகுழியில் காத்திருக்கும் ஆன்மாக்கள்கூட ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது."

– இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அணையா விளக்குப் போராட்டத்தின் கடைசி நாளான நேற்று சிலர் குழுவாகத் திரண்டு வந்து போராட்டத்திடலில் இருந்து அரசியல்வாதிகளை வெளியேறுமாறு கோஷமிட்டு ரகளையில் ஈடுபட்டனர். இது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலே இவ்வாறு காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டம் அஞ்சலோட்டம் போன்றது. முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டவுடன் போராட்டத்தை ஜனநாயக ரீதியாகத் தமிழ் அரசியல் தலைமைகள் முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால், அதைச் செய்வதற்கு அவர்கள் தவறியதாலேயே தமிழ் மக்கள் ஆங்காங்கே ஜனநாயக ரீதியாக ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் தங்களால் இயன்ற அளவுக்கு ஏற்பாடு செய்யத் தலைப்பட்டுள்ளனர்.

மக்கள் செயல் என்ற தன்னார்வ அமைப்பின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட அணையா விளக்குப் போராட்டமும் இத்தகைய ஒரு மக்கள் போராட்டமே ஆகும்.

மக்கள் செயல் அமைப்பு போராட்டத்தில் அனைவரையும் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறு அழைப்பை விடுத்ததன் அடிப்படையிலேயே பெருந்திரளாகப் பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தார்கள். அரசியல்வாதிகளும் கலந்துகொண்டார்கள்.

போராட்டத்தை ஏற்பாடு செய்த இளைஞர் குழாம் அரசியல்வாதிகளும் போராட்டத்திடலில் அமர இடம் வழங்கிய நிலையில் போராட்டத்தைக் குழப்பும் நோக்குடன் திட்டமிட்டு அங்கு வந்த சிலரே இந்த அநாகரிக செயலை அரங்கேற்றியுள்ளனர். இது போராட்ட ஏற்பாட்டாளர்களே அரசியல் வாதிகளை வெளியேற்றியது போன்ற மாயத் தோற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

விடுதலை அரசியல் முள்ளிவாய்க்காலின் பின்னர் தேர்தல் அரசியலாக மாத்திரமே சுருங்கிப்போய் உள்ளது. ஆசனங்களுக்காகத் தவங்கிடக்கும் அரசியல்வாதிகளால் கட்சிகளுக்கு இடையேயும் கட்சிகளுக்கு உள்ளேயும் தோற்றுவிக்கப்படுகின்ற முரண்பாடுகளின் விளைவுகளில் ஒன்றே அணையா விளக்குப் போராட்டத்தில் இடம்பெற்ற சம்பவமும் ஆகும்.

தேர்தல் மேடைகளில் எதிரும் புதிருமாக வசை பாடும் அரசியல்வாதிகள் அதையே நீதிக்கான போராட்டங்களுக்குள்ளும் நுழைப்பதை எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள இயலாது. இத்தகைய இழிசெயல்கள் இனவிடுதலை அரசியலை மென்மேலும் நலிவுபடுத்தும்." – என்றுள்ளது.

# தங்கமுலாம் பூசப்பட்ட துப்பாக்கி விவகாரம்: துமிந்தவுக்கு விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு!



முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள துமிந்த திஸா நாயக்க இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுயுள்ளது.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர்மாடி குடியிருப்பு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த பெண்ணிடம் இருந்து தங்கமுலாம் பூசப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கொழும்பு – பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து மே மாதம் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த துமிந்த திஸாநாயக்க, சுகயீனம் காரணமாக மே மாதம் 25ஆம் திகதி சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மே மாதம் 28ஆம் திகதி மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்வி மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வவுனியாப் பல்கலைக்கழகம்!

## Amana takafull life Plc நிறுவனத்துடன் ஒப்பந்தம்





வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபாரக் கற்கைகள் பீடத்தின் சந்தைப் படுத்தல் முகாமைத்துவத் துறையயானது Amana takafull life Plc நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இது கல்வி மற்றும் தொழில்துறை ஒத்துழைப்பை வலுப்படுத்தும் ஒரு முக்கியமான கட்டமாகக் கருதப்படுகிறது.

இந்த நிகழ்வில் முக்கிய அதிதிகளான சிரேஷ்ட பேராசிரியர் அ. அற்புத்தராசா, பேராசிரியர் யோ. நந்தகோபன், கீஹான் ராஜபக்ஷ, புவிராஜ், உதவி பொது முகாமையாளர் எஸ்.ஏ. ஜுட் லியோன் மற்றும் எஸ். சிவநேந்திரா உட்பட இரு நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

திருமதி கே.பி.டபிள்யூ. தில்ஹானி ஆர். வீரசிங்கவால் ஒப்பந்தத்தின் விளக்கம் வழங்கப்பட்டது.

பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தம் அதிகார பூர்வமாக கைச்சாத்திடப்பட்டு நினைவு பரிசும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழக நிர்வாகிகளான பதிவாளர், நிதியாளர் உதவிப் பதிவாளர், துறைத்தலைவர்கள், மாணவர்கள் மற்றும் கல்வி சார் மற்றும் கல்வி சாரா பணியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இது இந்த நிறுவன ஒத்துழைப்புக்கான பல்கலைக்கழகத்தின் வலுவான ஆதரவைப் பிரதிபலிக்கிறது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், கூட்டு ஆய்வு மாணவர்களின் திறன் மேம்பாடு, மற்றும் தொழில்துறைத் தொடர்புகளை ஊக்குவிக்கும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---



# அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர்; 4 கிலோ மீற்றர் தூரம் விரட்டிப் பிடித்த பொலிஸ்!

(ந.லோகதயாளன்)

பளை பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மண் ஏற்றிவந்த டிப்பரை சாவகச்சேரி பொலிஸார் இன்று (26) காலை நுணாவில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக மறித்து சோதனையிட முற்பட்டனர்.

இதன்போது பொலிஸாரின் சமிக்ஞைகளை மீறித் தப்பிச்சென்ற டிப்பரை நான்கு கிலோ மீற்றர் தூரம் துரத்திச் சென்று மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயத்துக்கு முன்பாக வைத்து டிப்பரை மடக்கியுள்ளனர்.

இதன்போது டிப்பரை கைவிட்டு தப்பிச் சொல்ல முற்பட்ட சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சாரதி பளை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அனுமதியின்றி மணல் ஏற்றியமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, பொலிஸாரின் சமிக்கைக்கு கட்டுப்படாமை, விபத்தை ஏற்படுத்தும் வகையில் செலுத்தியமை, பிரதான வீதியில் ஆபத்தான முறையில் வாகனத்தை செலுத்தியமை போன்ற பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சாரதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# செம்மணியில் அமைச்சர் சந்திரசேகரனை சிலர் தடுத்தமை கண்டிக்கத்தக்க விடயம்!

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி கனகரஞ்சனி தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

மனிதப் புதைகுழி நீதிப் போராட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரனை தடுத்தது தவறு என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி கனகரஞ்சனி தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கான போராட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்த அமைச்சர் சந்திரசேகரனை சிலர் தடுத்தமை கண்டிக்கத்தக்க விடயம் என்றும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி கனகரஞ்சினி தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்டர் ராக்கைச் சந்தித்த பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் உரிய முறையில் விசாரணை செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

அதனை வலியுறுத்தி இடம்பெற்ற போராட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன் கலந்து கொண்டிருந்த வேளையில் சிலர் அவரை தடுத்தனர். அது தவறு அதற்கு நாம் மனம் வருந்துகிறோம்.

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி போராடும் தாய்மார்கள் என்ற வகையில் எமது நீதிக்கான பயணத்தில் ஒன்றிணை வருபவர்களைப் புறக்கணிப்பது எமது நோக்கம் அல்ல.

அமைச்சர் எமது போராட்டத்துக்கு வருகை தந்தது நீதியை எதிர்பார்த்து காத்திருக்கும் எமக்கு சாதகமான விடயம். அவரும் இந்த போராட்டத்துக்குக் கலந்து கொண்டவராய் பொறுப்பு கூறுவதாக இருக்கும்.

இந்த நிலையில் சில குழப்பவாதிகள் இதனைக் குழப்பும் வகையில் செயற்பட்டுள்ளனர்.– என்று அவர் மேலும் தெரிவித்தார்.








# வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டது டீசல் பௌசர்!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி குடமுருட்டி பாலத்துக்கு அருகில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து 33 ஆயிரம் லீற்றர் எரிபொருள் தாங்கி ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து இன்று (26) அதிகாலை ஏற்பட்டுள்ளது.

முத்துராஜவெலவில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பூநகரி வீதியால் பயணித்த 33 ஆயிரம் லீற்றர் எரிபொருள் தாங்கியே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

விபத்தின்போது எவருக்கும் பாதிப்பு ஏற்படாதபோதும் அதிக எரிபொருள் வீதியில் சிந்தி நாசமாகியது.

விபத்தின் போது கொள்கலனில் இருந்த 33 ஆயிரம் லீற்றர் டீசலில் அதிக டீசல் வெளியேறி விரயமாகியுள்ளது.

இந்த விபத்தால், டீசல் கொள்கலனில் கசிவு ஏற்பட்டதை அடுத்து, அதிலிருந்து டீசல் வெளியேறிய நிலையில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் அதனை நிரப்பிச் சென்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறாரும் தொற்றா நோயும்

‘தொற்றா நோய்கள்’ உலகளவில் ஒரு பெரிய பொது சுகாதார சவாலாக உருவெடுத்துள்ளன என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

சமூகத்தில் நோய்ப் பாதிப்பு, இறப்பு வீத அதிகரிப்பு மற்றும் சமூக, பொருளாதார சுமை போன்றவற்றுக்கு தொற்றா நோய்களே பிரதான காரணமாகின்றன. உலகின் பிற பகுதிகளைப் போலவே இலங்கையிலும் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை தொற்றா நோய்களே ஏற்படுத்துகின்றன. இலங்கையில் வருடத்திற்கு மொத்த இறப்புகளில் 83 வீதமானவை தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன.

இருதய நோய்கள், நீரிழிவு நோய், புற்றுநோய் மற்றும் நாள்பட்ட சுவாச நோய்கள் போன்ற தொற்றா நோய்கள், நாட்டின் சுகாதார செலவினங்களில் கணிசமான பங்கைக் கொண்டுள்ளன. தாக்கத்தைச் செலுத்துகின்றன. அத்தோடு இவற்றினால் நாட்டினதும் குடிமக்களினதும் உற்பத்தித்திறனும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது.

இந்தத் தொற்றா நோய்கள் இலங்கை குழந்தைகளிடையே அதிகரித்து வரும் போக்கு குறித்து சுகாதார அமைச்சகம் கவலை தெரிவித்துள்ளது. மோசமான உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறைத் தேர்வுகள் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகம் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பில் பேசிய அமைச்சின் ஊட்டச்சத்துப் பிரிவின் இயக்குநர் டாக்டர் மோனிகா விஜேரத்ன, நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நிலைமைகள் பள்ளி வயது குழந்தைகளை அதிகளவில் பாதித்து வருகின்றன என்ற அதிர்ச்சித் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

2024 தேசிய ஊட்டச்சத்து மாதத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி 1, 4, 7 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் 7 வீத மாணவர்கள் அதிக எடையுடன் இருப்பது கண்டறியப்பட்டதாக டாக்டர் மோனிகா விஜேரத்ன குறிப்பிட்டார்.

அதே ஆண்டில் 13 முதல் 17 வயதுடைய குழந்தைகளிடையே நடத்தப்பட்ட உலகளாவிய சுகாதார ஆய்வில், 3 வீதம் பேர் உடல் பருமனாகவும், 12 வீதம் பேர் அதிக எடையுடனும் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

குழந்தைகளின் உணவு முறைகள் குறித்த சமீபத்திய ஆய்வில், கணக்கெடுப்புக்கு முந்தைய வாரத்தில் 17 வீதம் பேர் இனிப்புப் பானங்கள் மற்றும் தொடர்புடைய பானங்களை உள்கொள்கின்றனர், 28 வீதம் பேர் உப்பு உணவுகளை அதிகம் சாப்பிடுகின்றனர், சராசரியாக 28 முதல் 29 வீதம் பேர் அதிக கொழுப்புள்ள உணவுகளை உட்கொண்டனர், 41 வீதத்தினர் அதிக சர்க்கரை (சீனி) உணவுகளை சாப்பிட்டு வருகின்றனர் என்று கண்டறியப்பட்டது.

இந்த முறைகள் குழந்தைகளின் உணவுப் பழக்கம் சிறந்ததல்ல என்பதைக் காட்டுகின்றன என்று டாக்டர் மோனிகா விஜேரத்ன கூறினார். இதன் விளைவாக, இளம் வயதிலேயே உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு போன்ற தொற்றா நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகரித்து வருகிறது என்கின்றார் அவர்.

ஆரோக்கியமான - வளமான - திடகாத்திரமான - எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதற்காக நம் சிறாரின் உணவுப் பழக்கவழக்கங்கள் தொடர்பில் நாம் விசேட கவனம் எடுப்பது இன்றியமையாததாகின்றது.

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்துக!

## ஐ.நா. ஆணையாளரிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று ஐ.நாவின் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் தெரிவித்துள்ளார்.




குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் யாழ் ஊடக அமையத்தில் இன்று (26) வியாழக்கிழமை மேற்கொண்ட ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை குறித்த கோரிக்கை அடங்கிய மகஜர் ஐ.நா. சபையின் ஆணையாளருக்கு வழங்கியிருந்தோம். இதேநேரம் குறித்த விடயம் தொடர்பில் ஏற்கனவே இலங்கை அரசுக்கும் வலியுறுத்தியிருந்தோம்.

இந்த நிலையில் நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்த ஐ.நா. ஆணையாளர் யாழ்ப்பாணத்தில் காணப்படும் பல்வேறு இடங்களுக்கும் சென்று பிரச்சினைகள் மற்றும் சாட்சியங்களை நேரில் பார்வையிட்டிருந்தார். மக்களின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களையும் பெற்றிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் எமது அமைப்பினரால் கைதிகளின் விடுதலைக்கான வலுயுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.- என்றார்.

# உலகளாவிய ரீதியிலான பிரதிநிதிகளுடன் தமிழ் பண்பாட்டு அனைத்துலக மகாநாடு!

## 30ஆம் திகதி முதல் ஜூலை 6 ஆம் திகதிவரை ஏற்பாடு

உலகளாவிய ரீதியில் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் தமிழ் பண்பாட்டு அனைத்துலக மகாநாடு எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் ஜூலை 6 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம், நுவரெலியா, கொழும்பு ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது என்று இந்த மாநாட்டின் இணைப்பாளரும் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தருமான பேராசிரியர் க.பாஸ்கரன் தெரிவித்தார்.

தொடக்க விழா 30 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் தலைமையில் நடைபெறும்.

வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக இந்துநாகரீகத் துறைத்தலைவர் பேராசிரியர் திருமதி விக்னேஸ்வரி பவநேசன் நிகழ்த்துவார்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சி.சற்குணராசாவும் கௌரவ விருந்தினராக இந்திய தூதுவர் எஸ்.சிறிசாய் முரளி, வடமாகாண பிரதம செயலாளர் தனுசா முருகேசன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

மாநாட்டின் நோக்கவுரையை மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் க.பாஸ்கரன் நிகழ்த்துவார்.

கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரை வழங்குவார். நூல் வெளியீடு, கருத்தரங்க நிகழ்வுகள், கலைநிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக கலைமாமணி கலாநிதி சாம்பசிவசோமாஸ்கந்தசர்மா வழங்கும் வள்ளி திருமணம் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறை



யுடன் இணைந்து தஞ்சாவூர் அனைத்துலக பண்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு திருநெறி தமிழ் சைவ சமய பாதுகாப்புப் பேரவை, லண்டன் தமிழ் கல்வியகம், லண்டன் உலகச் செம்மொழித் தமிழ்ச் சங்கம், பிரான்ஸ் இந்திய வம்சாவளி மக்களுக்கான அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

சுவிஸ், கனடா, இங்கிலாந்து, நோர்வே, ஜேர்மனி, பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், ரீயூனியன் தீவுகள், தென்ஆபிரிக்கா, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜூலை 2 ஆம் திகதி நுவரெலியா மாவட்ட செயலக ஆச்சரிய மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்குத் தமிழ் பண்பாடு அனைத்துலக மாநாடு கொட்டகல ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ஜெகநாதன் சற்குருநாதன் தலைமையில் ஆரம்பமாகும்.

சிறப்பு விருந்தினர்களாகத் தோட்டம் மற்றும் சமூக உள கட்டமைப்பு துணை அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராசன் ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக மத்திய மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஆர்.ராஜாராம், தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் பி.சிவப்பிரகாசம், நுவரெலிய முன்னாள் உதவி கல்விப் பணிப்பாளர் திருமதி நிர்மலா பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நடனமணி திருமதி சாந்தி அன்பழகன் தயாரித்து வழங்கும் மலையக மண்ணின் குரல் என்ற நாட்டிய நாடகமும் கருத்தரங்க அமர்வும் சிறப்புரைகளும் இடம்பெறும்.

மையக்கருத்துரையை பேராதனை பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கை நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் எஸ். விஜயசந்திரன் நிகழ்த்துவார்.

ஆனைத்துலக தமிழ் பண்பாட்டு மாநாடு கொழும்பு மயூரபதி ஸ்ரீபத்ர காளி அம்மன் ஆலய பண்பாட்டு கலையரங்கில் ஜூலை 2 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

கொழும்பு மாநகர முதல்வர் திருமதி விராய் கெலி பல்கசார் திருவிழக்கை ஏற்றி மாநாட்டை ஆரம்பித்து வைப்பார்.

கொழும்பு மயூரபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலய அறங்காவலர் சபை தலைவர் பெ.சுந்தரலிங்கம் மாநாட்டுக்குத் தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக புத்தசாசன சமய கலாசார அமைச்சர் பேராசிரியர் இந்துமா சுனில் சேனவி கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக மீன்பிடி அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தோட்ட மற்றும் சமூக உள் கட்டமைப்பு துணை அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், இந்து சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் ய.அநிருத்தனன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நடனமாமணி ஸ்ரீமதி பூர்ணிமா புஸ்கலா வழங்கும் ஸ்ரீபரதகலா அக்கடமி மாணவிகளின் அறுபடை வீடு நாட்டிய நிகழ்ச்சியும் இடம்பெறும்.

# ஆட்சியிலும் பதவிகளிலும் மாற்றங்கள்; மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை!

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி மத்திய குழுவின் அறிக்கை






நாட்டில் ஆட்சியிலும் பதவிகளிலும் மாற்றங்கள் வந்தனவே தவிர மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதாக இல்லை.

இவ்வாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாடும் மக்களும் எதிர் நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கும், தீர்க்கப்படாது நீடித்துவரும் தேசிய இனங்கள் எதிர்நோக்கி வரும் தேசிய இனப் பிரச்சினைக்கும் உரிய தீர்வுகள் கிடைக்கும் எனும் நம்பிக்கையிலேயே ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை நாட்டின் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் வாக்களித்து பதவிக்குக் கொண்டு வந்தனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவிக்கும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனான நாடாளுமன்றத்துக்கும் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு வரும் என்று நம்பியே கடந்த கால ஆட்சியாளர்களை நிராகரித்து தேசிய மக்கள் சக்தியினருக்கு மக்கள் வாக்களித்தனர்.

ஆனால், எட்டு மாதங்கள் கடந்த நிலையில் நாடும் மக்களும் எதிர் நோக்கியுள்ள, மோசமடைந்துள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கும் வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளடங்கிய தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வு காணும் அறிகுறிகள் எதுவுமே காணப்படவில்லை. மக்களைத் திசை திருப்பி வைத்திருப்பதிலேயே கவனம் செலுத்தப்படுகிறது.

பதவிக்கு வருவதற்கு முன்பு மக்களுக்குக் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகள் பற்றி அநுர குமார அரசு கடும் மௌனம் காத்து வருகிறது. “வளமான நாடு அழகான வாழ்க்கை” எனும் சொற்தொடர் பதவிக்கான வெறும் அலங்கார வார்த்தைகளாகி அவை மறக்கப்பட்டும் வருகின்றன. அதேவேளை அமெரிக்கா தலைமையிலான ஐ.எம். எவ். எனும் சர்வதேச நாணய நிதியத்தின் கடனும் அறா வட்டியும் தொடர்வதற்கு அதன் மோசமான நிபந்தனைகள் மறுபேச்சி ன்றி ஏற்கப்பட்டும் உள்ளன. அதன் விளைவே அண்மைய பதினைந்து வீத மின் கட்டண உயர்வாகும்.

அதே போன்றே வற்வரி உட்பட வரி விதி ப்புகளிலும், ஐ எம் எவ் முன்வைக்கும் நிபந்தனைகளின் அடிப்படையிலுமே மருந்துகள் உட்பட பொருள்களின் விலைகள் குறைவடைய முடியாது உள்ளன.

அரிசி முதல் உப்புப் புளிவரையான அன்றாட உணவுப் பொருள்களை உழைக்கும் மக்கள் வாங்க முடியாது வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் கடும் பாதிப்புகளைப் பெற்று வருகின்றனர். மாற்று வழிதெரியாது மக்கள் திணறித் திண்டாடி நிற்கின்றனர்.

இந் நிலையில் ஆட்சியில் இருப்பவர்கள் எட்டு மாதங்களுக்கு முன்பு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை, மக்கள் நினைவுபடுத்தத் தொடங்கியுள்ளனர். அதேவேளை இலங்கையின் வளங்கள் இந்திய ஆளும் வர்க்கக் கோப்பி ரேட் பெருமுதலாளிகளுக்குத் தாரை வார்க்கப் பட்டு வருவதையும் காண முடிகிறது.

ஜனாதிபதி அநுராவுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் இதுவரை நாடாளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்தப்படவில்லை. இது ஏன்என்பது தான் கேள்வியாக உள்ளது.

அமைப்பு மாற்றம் (சிஸ்ரம் சேஞ்ச்) என உரத்துப் பரப்புரை செய்து பதவிக்கு வந்தவர்கள் இன்று பதவிகளையும் ஆட்சி அதிகாரத்தையும் இறுகப் பற்றிக் கொண்டு இன்றைய நவகொலனிய நவதாராள முதலாளிய அமைப்பைப் பாது காத்து முன்கொண்டு செல்பவர்களாகத் தம்மை நிலை நிறுத்தி வருவதையே காணமுடிகிறது.

ஆட்சி மாற்றம் வந்த போது இது வரையான சொத்து சுகபோக உயர் ஆளும் வர்க்க ஆட்சிகளை விட நாட்டுக்கும் அனைத்து மக்களுக்கும் வரப்பிரசாதங்களைக் கொண்டு வரப் போகும் ஒரு ஆட்சியாக இருக்கும் என்றே வாக்களித்த மக்கள் நம்பினர். ஆனால் இன்றைய நிலையில் மக்களின் எதிர்பார்ப்புகள் வெறுமையடைந்து வருவதையே காணமுடிகிறது.

ஆதலால் தேசிய மக்கள் சக்தி அரசு பதவிக்கு வருவதற்கு முன்பு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை மக்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியப் பிடிக்குள்ளும், இந்தியப் பிராந்திய மேலாதிக்க வல்லரசு வலைக்குள்ளும் அகப்பட்டு நிற்கும் அநுர குமார திசநாயக்க தலைமையிலான இன்றைய ஆட்சியானது எந்தளவுக்கு நாட்டின் வளங்களைப் பாதுகாத்துத் தேசிய உற்பத்திப் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு முன்னெடுத்து அனைத்து மக்களதும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களதும் நலன்கள், தேவைகள், உரிமைகளை எவ்வாறு நிலை நிறுத் தப் போகின்றது என்பதே இன்றைய பெரும் கேள்வியாக எழுந்து நிற்கிறது.

இந் நிலையில் எமது கட்சி பொருளாதார நெருக்கடிகளுக்கும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும் உள்ளாகி நிற்கும் ஏகப்பெரும் பான்மையான உழைக்கும் மக்களோடும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களோடும் இணைந்து நின்று மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகக் குரல் கொடுத்துப் போராடுவதே எமது உறுதியான நிலைப் பாடாகும்.- என்றுள்ளது.

# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தகுதி

(நூருல் ஹுதா உமர்)

2025 ஆம் ஆண்டுக்கான வலய மட்ட விளையாட்டுப் போட்டியில் கடந்த வருடத்தை போன்று இவ்வருடமும் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கல்முனை லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய மாணவர்கள் 10 வெற்றிகளை தனதாக்கி மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இதில் 02 முதலாமிடங்கள், 05 இரண்டாமிடங்கள், 03 மூன்றாமிடங்கள் அடங்குகின்றன.



வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் இந்த வெற்றிக்காக உழைத்த பாடசாலையின் விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எம்.எப்.எம். றிபாஸ், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ. ஆபாக், இணைப் பாடவிதான பொறுப்பதிபர் எம்.எப்.எம்.ஆர். ஹாத்தீம், பிரதி அதிபர் எஸ்.எம். சுஜான், ஏனைய பங்களிப்பு வழங்கிய ஆசிரியர்கள் அனைவருக்கும் பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் பாடசாலை சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.



# கசிப்பு மற்றும் போதைப் பொருள் விற்பனைகள் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் நடவடிக்கை

## மட்டக்களப்பு என்.பி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிரபு தெரிவிப்பு







**(வாலகிருஸ்ணா)**

மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட சில இடங்களில் முன்னெடுக்கப்படும் கசிப்பு மற்றும் போதைப் பொருள் விற்பனைகள் தொடர்பில் பொலிஸார் மற்றும் மதுவரித்திணைக்கள அதிகாரிகள் இணைந்து சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கப் பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன என்று தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் பிரதேச அபிவிருத்திக்குழு கூட்டம் நடைபெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெட்னத்தின் ஒழுங்கமைப்பில் மண்முனை வடக்கு பிரதேச அபிவிருத்திக்குழுவின் தலைவரும் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கந்தசாமி பிரபு தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்செயன் உட்பட திணைக்களங்களின் தலைவர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதார திணைக்கள அதிகாரிகள் என பல்வேறு திணைக்கள பதவி நிலை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது கடந்த ஆண்டு மண்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது. பூர்த்தியடையாத வேலைத் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கான பணிப்புரைகளும் விடுக்கப்பட்டன.

இதேபோன்று 2026 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

கிராமிய வீதிகள் அபிவிருத்தி, உலக உணவு திட்டத்தின் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள், ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மூன்று கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில் அங்கு முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் என்பன குறித்து ஆராயப்பட்டது.

அத்துடன் தேசிய வீடமைப்பு அதிகாரசபை, மீள்குடியேற்ற அமைச்சு என்பனவற்றின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள வீடமைப்பு திட்டங்கள்,சமூக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டு அதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

இந்த கூட்டத்தின்போது மட்டக்களப்பு மாநகரசபை ஊடாக முன்னெடுக்கப்படவுள்ள வேலைத் திட்டங்கள் குறித்தும் அதற்கான உதவிகளையும் ஆதரவையும் வழங்குவது குறித்தும் இதன்போது பல்வேறு கருத்துகளும் தெரிவிக்கப்பட்டன.

மண்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்நோக்கும் மைதானப்பிரச்சினைகள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது. மைதானப் பிரச்சினைகளை எதிர்காலத்தில் கலந்துரையாடல்களை முன்னெடுத்து தீர்த்து வைக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குடா போன்ற பகுதியில் கடந்த 35 வருடத்துக்கும் மேலாகக் காணி உறுதிகள் மற்றும் எந்த வித ஆவனங்களும் இல்லாத நிலையில் உள்ள மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் முகமாக நடமாடும் சேவைகளை நடத்துவது எனவும் இதன்போது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன்போது மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட சில இடங்களில் கசிப்பு விற்பனைகள் என்பது அதிகளவில் இடம்பெற்றுவருகிறது என்றும் இது தொடர்பில் கடந்த காலத்தில் மக்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்தியபோதிலும் பல்வேறு தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் இதுவரையில் அதனைத் தடுப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸ் சிரேஷ்ட அத்தியட்சகர், அலுவலக விசேட போதை ஒழிப்புப் பிரிவையும் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித்திணைக்களத்தையும் இணைந்து கசிப்பு மற்றும் போதைப்பொருள் விற்பனை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு இங்கு தெரிவித்தார்.



# சாய்ந்தமருது சுகாதார அலுவலகத்தில் அன்னையர் ஆதரவுக் குழு கூட்டம்



**(நூருல் ஹுதா உமர்)**

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 9 அன்னையர் ஆதரவுக் குழுக்களின் ஒன்றுகூடல் சாய்ந்தமருது ஏ.பி.சி. நிலையத்தில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் அனுசரணையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அன்னையர் ஆதரவு குழு உறுப்பினர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக சுயதொழில்களை ஊக்குவிப்பதற்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. இதில் அன்னையர் ஆதரவுக் குழு உறுப்பினர்கள் 90 பேர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தாய் சேய் நலப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மேற்பார்வை தாதிய சகோதரி கே.சௌந்தரராஜன், பொதுச் சுகாதார தாதிய சகோதரி ஜீ.எச்.எஸ்.ஜீ.கமகே, மேற்பார்வை பொது சுகாதார மருத்துவ மாது டி. ராஜேஸ்வரி, சுகாதார கல்வி மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் எம்.ஜெ.எம்.பைறூஸ், பொது சுகாதார மருத்துவ மாதுக்கள் மற்றும் அன்னையர் ஆதரவுக் குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.





# சங்கானையில் மாபெரும் கவனவீர்ப்பு; போதைக்கு எதிராக இன்று போராட்டம்!

(எஸ். நிதர்ஷன்)

சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

போதைப் பொருள் பாவனையானது அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் அதன் தாக்கம் மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், குடும்பத்தவர்கள் என சிறியோர் முதல் பெரியோர்வரை அனைவரிடத்திலும் மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் குடும்பங்களிடையே பல்வேறு விதமான பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கும் போதைப் பொருள் பாவனையில் இருந்து அனைவரையும் மீட்கும் நோக்குடனும் இந்த விழிப்புணர்வுப் போராட்டமானது முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், போதை அற்ற வாழ்வே ஆரோக்கியத்துக்கான வழி, எம் சமூகத்தை அழிக்கும் மது எமக்கு தேவைதானா?, அரசே புதிய மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்காதே, மது ஒழிப்பில் ஈடுபடும் ஜனாதிபதிக்கு கை கொடுப்போம், போதையெனும் சாக்கடையில் விழாதீர்கள் எனும் வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்துக்குச் சங்கானை பிரதேச செயலகத்தினர், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர், சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினர், மானிப்பாய் பொலிஸார், வட்டுக்கோட்டை பொலிஸார், ஓட்டோ உரிமையாளர் சங்கத்தினர், அந்திரான் தோற்பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் ஆதரவு வழங்கினர்.

# வடமராட்சியில் இன்று நடைபெற்ற மாபெரும் வர்த்தகச் சந்தை!





யாழ்ப்பாணம் – வடமராட்சி கிழக்கு, போக்கறுப்பில் இன்று (26) மாபெரும் வர்த்தக சந்தை காலை 9 மணியளவில் ஆரம்பமானது. இந்தச் சந்தை வடக்கு மாகாண தொழிற்துறை திணைக்களம் மற்றும் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் நிதிப் பங்களிப்பில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மங்கள விளக்கேற்றி, வரவேற்பு நடனத்துடன் தமிழர் பாரம்பரிய முறைப்படி இடம்பெற்றது.

இந்தச் சந்தை நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தமது கைவினைப் பொருள்கள் மற்றும் உலர் உணவுகள், மரக்கறி வகைகள், ஆடைகள் என்பவற்றைக் காட்சிப்படுத்தித் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி, சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அவசரநிலை பிரகடனத்தின் 50 ஆண்டு நிறைவு; மத்திய அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றம்

அவசரநிலை பிரகடனத்தின் 50 ஆம் ஆண்டு நிறைவை அனுசரிப்பது குறித்த தீர்மானம் நேற்று மத்திய அமைச்சரவை கூட்டத்தில் நிறை வேற்றப்பட்டது.

இது தொடர்பில் மத்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "பிரதமர் நரேந்திர மோடி தலை மையில் நடைபெற்ற மத்திய அமைச் சரவைக் கூட்டத் தில், அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டதையும், இந்திய அரச மைப்புச் சட்டத்தின் உணர் வுகளைத் தகர்க்கும் முயற்சியையும் துணிச் சலுடன் எதிர்த்த எண்ணற்ற நபர்க ளின் தியாகங்களை நினைவு கூர்ந்து கௌரவிக்கவும் தீர்மானிக் கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு நவநிர்மாண் இயக்கம், சம்பூர்ண கிராந்தி இயக்கம் ஆகியவற்றுக்கும் தடை விதிப்பதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில், அரசமைப்பு ரீதியாக உத் தரவாதம் அளிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு, பின்னர் கற்பனை செய்து பார்க்க முடியாத வகையில் பல இன்னல்களை சந்தித்



தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. அவசர நிலை பிகரடனத்தின் அத்துமீறல்க ளுக்கு எதிரான அவர்களது துணிச் சலுக்கும் எதிர்ப்புக்கும் மத்திய அமைச்சரவை அஞ்சலி செலுத்தி யது.

இந்திய வரலாற்றில் அரசியல மைப்புச் சட்டம் சீர்குலைக்கப்பட்டு, குடியரசு மற்றும் ஜனநாயக உணர்வு சிதைக்கப்பட்டும், கூட்டாட்சித் தத்து வம் சீர்குலைக்கப்பட்டதற்கும், அடிப் படை உரிமைகள், மனித சுதந்திரம் மற்றும் கண்ணியம் ஆகியவற்றுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்ட மறக்க முடியாத அத்தியாயமாகும். இது அரச மைப்பு படுகொலை தினத் தின் 50 ஆண்டுகளைக் குறிப்பதாக உள்ளது.

மக்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மீதும், நாட்டின் ஜன நாயக நெறிமுறைகளின் நெகிழ் வுத் தன்மை மீதும் அசைக்க முடியாத நம்பிக்கையைக் கொண்டுள்ளதாக மத்திய அமைச்சரவை மீண்டும் தெரி வித்துள்ளது. சர்வாதிகார செயல் பாடுகளை எதிர்த்து அரசமைப்புச் சட்டம் அதன் ஜனநாயகக் கட்டமைப் புகளை பாது காப்பதில் உறுதியாக இருந்தவர்களி டமிருந்து உத்வேகம் பெறுவது இளை ஞர்கள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு இன்றியமை யாத ஒன்றாகும்.

ஜனநாயகத்தின் தாயாக திகழும் அரசமைப்புச் சட்டத்தின் மாண்புக ளைப் பாதுகாப்பதற்கும் ஒரே தேச மாக அதன் ஜனநாயகம் மற்றும் கூட்டாட்சி தத்துவத்தின் உணர்வை நிலை நிறுத்துவதற்கும் நாம் அனை வரும் உறுதியேற்க வேண்டும்." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# கண்காணிப்பு வளையத்தில் சினிமா பிரபலங்கள்: போதைப்பொருள் தொடர்பில் தீவிர விசாரணை

போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில் நடிகர் ஸ்ரீகாந்த் கைது செய்யப்பட்ட நிலையில், மற்றொரு நடிகரான கிருஷ்ணாவிடமும் பொலி ஸார் விசாரணை மேற்கொண்டுள்ள னர். இதுஒருபுறம் இருக்க கண்கா ணிப்பு வளையத்துக்குள் சினிமா பிரபலங்கள் கொண்டு வரப்பட்டுள் ளனர்.

போதைப் பொருள் பயன்படுத்திய வழக்கில் நடிகர் ஸ்ரீகாந்த் கடந்த 23 ஆம் திகதி இரவு நுங்கம்பாக்கம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர், அவர் 10 மணி நேர விசார ணைக்கு பிறகு எழும்பூர் நீதிமன்ற மாஜிஸ்திரேட் தயாளன் முன்னிலை யில் ஆஜர்படுத்தி, அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை 15 நாள் நீதிமன்ற காவலில் புழல் சிறையில் அடைக்கப் பட்டார்.

விசாரணையில், 'தீங்கிரை' படத்தை தயாரித்த காங்கிரஸ், தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய 3 கட்சிகளிலும் முன்பு தகவல் தொழில் நுட்ப பிரிவில் நிர்வாகியாக இருந்த மயிலாப்பூரைச் சேர்ந்த பிரசாத் என்பவர் மூலம் தனக்கு போதைப் பொருள் பழக்கமானதாக ஸ்ரீகாந்த் வாக்கு மூலமாக தெரிவித்து இருந்தார்.

இதேபோல் கழுகு திரைப்பட நடிகர் கிருஷ்ணாவும் போதைப் பொருளை பயன்படுத்தியதாக குற்றச் சாட்டு எழுந்தது. மேலும், அவர் ஆதா யம் இல்லாமல் நண்பர்கள் மற்றும் நடிகர், நடிகைகள் சிலருக்கு போதைப் பொருளை கைமாற்றியதாகவும்



தகவல் வெளியானது. இதையடுத்து, அவரை விசாரணைக்கு ஆஜராகும்படி நுங்கம்பாக்கம் பொலிஸார் சம்மன் அனுப்பினர். ஆனால், அவர் தலை மறைவானார். இதையடுத்து, 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்று மாலை நடிகர் கிருஷ்ணா தனது வழக்கறிஞர் களுடன் நுங்கம்பாக்கம் பொலிஸ் உதவி ஆணையர் முன்னிலையில் விசாரணைக்கு ஆஜரானார். அவரிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத் தினர். அப்போது, அவர் வாக்குமூலம் அளிக்கையில்,

"எனக்கு இரைப்பை தொடர்பான அலர்ஜி உள்ளது. இதயத்துடிப்பு வேக மாக இருப்பதால் சிகிச்சை எடுத்து வருகிறேன். இதனால், போதைப் பொருளை பயன்படுத்த முடியாது.

நான் பயன்படுத்தியதும் இல்லை. பிரதீப் குமார், பிரசாந்த் என எனக்கு யாருடனும் தொடர்பு இல்லை. ஆனால், நடிகர் ஸ்ரீகாந்துடன் நட்புடன் பழகி வந்தேன். அவருடன் சில பார்ட்டிகளில் கலந்து கொண்டுள்ளது உண்மைதான். ஆனால், நான் இதுவரை எந்த போதைப் பொருள்களையும் பயன் படுத்தியது இல்லை." என்றார்.

இந்தநிலையில் அவருக்கு மருத் துவ பரிசோதனை நடத்தி முடிக்கப் பட்டுள்ளது. அதன் முடிவுக்காக பொலி ஸார் காத்திருக்கின்றனர். இதுஒரு புறம் இருக்க கிருஷ்ணா வீட்டிலும் பொலிஸார் சோதனை மேற்கொண்ட னர். இதனிடையே நடிகர் ஸ்ரீகாந்த் சிறையில் பொலிஸாருக்கு ஒத்து ழைக்கிறார் எனவும் கொடுக்கும் உணவுகளை சாப்பிட்டு அமைதியாக இருக்கிறார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சினிமா துறையைச் சேர்ந்த மேலும் சிலர் இதேப்போல் போதைப் பொருளை பயன்படுத்தியுள்ளனர் என குற்றச்சாட்டு எழுந்தது. அதுவும் முன்னணி நடிகர், நடிகைகள் பெயர்க ளும் அடிபடுகின்றன. அவர்களைப் பற்றிய விவரங்களை உளவு பிரிவு பொலிஸார் சேகரித்து வருகின்றனர். இந்த போதைப் பொருள் பயன்படுத் தினால் சுமார் 45 நாள்கள் வரை உடலில் இருக்கும்.

இந்த காலக்கட்டத்துக்குள் மருத் துவ பரிசோதனை நடத்தினால் அது உறுதி செய்யப்பட்டு விடும். இதற்கு பயந்தே சில நடிகர், நடிகைகள் தொலை பேசிகளை நிறுத்தி வைத்துவிட்டு தலைமறைவாகிவிட்டனர் என கூறப்படுகிறது.



# விண்வெளிக்குச் செல்கின்றார் இந்திய வீரர் பால்கன் 9 ரொக்கெட் மூலம் 4 பேர் பயணம்

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா (வயது 39) உள்ளிட்ட 4 வீரர்கள் அடங்கிய குழுவினர் ஆய்வுப் பணிக்காக டிராகன் விண்கலத்தில், ஃபல்கான் 9 ரொக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு (ஐ.எஸ்.எஸ்) நேற்று புறப்பட்டு சென்றனர்.

அமெரிக்காவில் உள்ள ஆக்ஸியாம் ஸ்பேஸ் என்ற தனியார் நிறுவனம், நாசா, இஸ்ரோ மற்றும் ஐரோப்பிய விண்வெளி முகமை ஆகியவை இணைந்து, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மற்றும் ஃபல்கான் 9 ரொக்கெட் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு 4 விண்வெளி வீரகளை அனுப்பி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளும் திட்டத்தை தயாரித்தது.

இதற்கு இஸ்ரோ சார்பில் செல்ல ககன்யான் திட்டத்துக்கு ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டிருந்த விமானப் படை பைலட்களில் குரூப் கேப்டன் சுபான்ஷூ சுக்லா என்பவர் தேர்வு செய்யப்பட்டார். இவர் உத்தர பிரதேசம் லக்னோவைச் சேர்ந்தவர். கடந்த 1985 ஆம் ஆண்டு பிறந்த இவர், 2006 இல் இந்திய விமானப்படையில் பைலட்டாக சேர்ந்தார். 2019 ஆம் ஆண்டு விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் இஸ்ரோவின் ககன்யான் திட்டத்துக்கு தேர்வு செய்யப்பட்டார். அதன்பின் ரஷ்யாவின் யூரி காகரின் விண்வெளி மையத்துக்கு இவர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்.

சுபான்ஷு சுக்லாவுடன் சேர்ந்து, அமெரிக்காவின் பெக்கி விட்சன் (கொமாண்டர்) , போலந்தின் ஸ்லாவோசி உஸ்னான்ஸ்கி, ஹங்கேரியின் திபோர் கபு ஆகியோரும் விண்வெளி மையம் புறப்பட்டனர். இவர்கள் சென்ற 'கிரேஸ்' என பெயரிடப்பட்ட டிராகன் விண்கலம், ஃபல்கான் 9 ரொக்கெட் மூலம் அமெரிக்காவின் புளோரிடாவில் உள்ள நாசாவின் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து நேற்று மதியம் 12.01 மணிக்கு அனுப்பப்பட்டது.

இந்த விண்கலம் 28 மணி நேர பயணத்துக்குப்பின் சர்வதேச விண்வெளி மையத்தை இன்று மாலை 4.30 மணிக்கு சென்றடையும். இவர்களது பயணம் இந்த மாதத்தில் மோசமான வானிலை மற்றும் திரவ ஒக்ஸிஜன் கசிவு போன்ற காரணங்களால் 3 முறை ஒத்திபோடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

விண்வெளி பயணத்துக்குமுன் சுபான்ஷு சுக்லா அளித்த பேட்டியில், "நான் விண்வெளிக்கு ஆய்வு உபகரணங்களை மட்டும் எடுத்துச் செல்லவில்லை. கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் மற்றும் கனவுகளை கொண்டு செல்கிறேன்." என்றார்.

சர்வதேச விண்வெளி மையம் செல்லும் இந்தக் குழுவினர், இஸ்ரோவின் 7 அறிவியல் சோதனைகளுடன் சுமார் 60 பரிசோதனைகளை மேற்கொள்கின்றனர். சர்வதேச விண்வெளி மையத்தில் 2 வாரம் காலம் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர் ஆய்வுகளை முடித்துவிட்டு டிராகன் விண்கலத்தில் பூமி திரும்புவர்.

விண்வெளி பயணம் மேற்காண்ட முதல் இந்தியர் ராகேஷ் சர்மா. இவர் கடந்த 1984 ஆம் ஆண்டு ரஷ்யாவின் சோயுஸ் விண்கலத்தில் விண்வெளிப் பயணம் மேற்கொண்டார். அதன்பின் 41 ஆண்டுகளுக்குப்பின் விண்வெளி பயணம் மேற்கொள்ளும் இந்தியர் சுபான்ஷு சுக்லா என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ராகேஷ் சர்மாவின் நினைவாக ஒரு பொருளையும் சர்வதேச விண்வெளி மையத்துக்கு கொண்டு செல்கிறார். அதை விண்வெளி பணத்தை முடித்து பூமி திரும்பியபின் தெரிவிப்பதாக சுபான்ஷு சுக்லா தெரிவித்துள்ளார்.



# மீண்டும் தாக்குதல் நடத்துவோம் ஈரானுக்கு ட்ரம்ப் கடும் எச்சரிக்கை





அணுசக்தி திட்டங்களை தொடர்ந்தால் மீண்டும் தாக்குதல் நடத்துவோம் என ஈரானுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அமெரிக்காவின் தாக்குதல் காரணமாக ஈரானின் அணுசக்தி நிலையங்கள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளன. அவர்களால் நீண்ட காலம் அணு ஆயுதங்களை தயாரிக்க முடியாது. பல தசாப்தங்களுக்கு அவர்களின் அணுசக்தி திட்டங்கள் பின்னடைவை சந்தித்து உள்ளது. இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் நல்லபடியாக முன்னோக்கி செல்கிறது.

ஜப்பான் மீது அமெரிக்கா அணு குண்டு வீசியதால் தான் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. ஹிரோஷிமா, நாகசாயி ஆகியவற்றை உதாரணமாக பயன்படுத்த விரும்பவில்லை. ஆனால், தற்போதும் அமெரிக்கா நடத்திய தாக்குதலால் தான் போர் முடிவுக்கு வந்தது.

பாலஸ்தீனத்தின் காசாவில் வளர்ச்சி காணப்படுகிறது. ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதல் காரணமாக மேற்கு ஆசியாவில் நேர்மறையான தாக்கம் ஏற்பட்டு உள்ளது. ஈரான் மீண்டும் அணுசக்தி திட் டங்களை தொடர்ந்தால் அமெரிக்கா மீண்டும் தாக்குதல் நடத்தும்.”- என்றார்.





# அணுகுண்டுகளை தாங்கும் திறன் கொண்ட போர் விமானங்களை வாங்கும் பிரித்தானியா

பிரித்தானியா அணுகுண்டுகளை தாங்கும் திறனுடைய எஃப்-35 போர் விமானங்களை அமெரிக்காவிடம் இருந்து கொள்வனவு செய்ய உள்ளமையை நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் மார்க் ருட்டே வரவேற்றுள்ளார்.

மேற்படி விமானங்களை அமெரிக்காவிடம் இருந்து கொள்வனவு செய்யும் பிரித்தானியாவின் இந்த முடிவு பாதுகாப்பு மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாகவும், நேட்டோ கூட்டமைப்பின் அணுசக்தி ஒத்துழைப்பு திட்டத்திலும் முக்கிய இடம் பிடிக்கின்றது.

இதன்மூலம், நேட்டோ நாடுகளின் வான்வழி அணுசக்திப் படை மேலும் பலம்பெறும் என போரியல் வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அணுகுண்டுகளைத் தாங்கும் திறனுடைய எஃப்-35 போர் விமானங்களை அமெரிக்காவிடமிருந்து வாங்கவுள்ளதாக பிரித்தானியா பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் அறிவித்திருந்தார்.

அத்துடன் சுமார் 95 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான 350 வான்வழிப் பாதுகாப்பு ஏவுகணைகளை, உக்ரைன் அரசுக்கு வழங்குவதாக பிரித்தானியா பிரதமர் தெரிவித்தார். மேற்படி விடயத்தை நெதர்லாந்து நாட்டில் நடைபெறும் நேட்டோ அமைப்பின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் இதனைக் குறிப்பிட்டார்.

பிரித்தானியா தனது அணு பாதுகாப்பு நிலைப்பாட்டை பலப்படுத்தும் மிகப்பாரிய முயற்சியில் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலிய ஏவுகணைத் தாக்குதலில் ஈரானிய கவிஞர் கொல்லப்பட்டார்



இஸ்ரேலிய ஏவுகணைத் தாக்குதலில் ஈரானிய கவிஞர் பர்னியா அப்பாசி கொல்லப்பட்டுள்ளார்.

இஸ்ரேலிய ஏவுகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமக்களில் ஈரானிய கவிஞர் பர்னியா அப்பாசியும் உள்ளடங்குகிறார் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் இவர் கொல்லப்பட்டார்.

23 வயதான இவர் கவிஞரும் ஆங்கில பட்டதாரியுமாவார்.

கனடா முரசு
வியாழக்கிழமை 26/06/2025

**கனடாவில் கோர விபத்து; 2 பேர் பரிதாப உயிரிழப்பு**

கனடாவின் நோவா ஸ்கோஷியா மாகாணத்தின் 103 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற பயங்கர வாகன விபத்தில் இரண்டு பேர் உயிரிழந் 02▶





# மத்திய கிழக்கு நாடுகளில் இருக்கும் ஆயிரக்கணக்கான கனேடியர்கள்

## தமது சொந்த நாட்டுக்குத் திரும்பினர்

இஸ்ரேல் ஈரான் மோதலுக்கிடையே, நூற்றுக்கணக்கான கனேடியர்கள் மற்றும் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்றவர்கள் நாடு திரும்பியுள்ளார்கள்.

ஆனால், இன்னமும் ஆயிரக்கணக்கானோர் மத்திய கிழக்கு நாடுகளில் இருக்கின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.

சுமார் 6,000 கனேடியர்கள் மற்றும் கனேடிய நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெற்றவர்கள் இன்னமும் இஸ்ரேல் மற்றும் West Bank பகுதியில் இருப்பதாக Global Affairs Canada (GAC) அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இவர்கள்போக, மேலும் 5,500 ஈரானிலிருக்கின்றனர் என கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளின் வான்வெளி மூடப்பட்டுள்ளதால், அண்டை நாடுகள் மூலமாக மத்திய கிழக்கு நாடுகளிலிருக்கும் கனேடியர்களை கனடாவுக்கு அழைத்துவர கனடா அரசு விமானங்களை ஏற்பாடு செய்துவருவதாக கனடா வெளி விவகாரங்கள் துறை அமைச்சரான அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.





# டொரண்டோ, ஒன்ராறியோவில் வெப்ப அலை முடிவுக்கு வந்தது

டொரண்டோ மற்றும் ஒன்ராறியோ மாகாணம் முழுவதும் கடந்த மூன்று நாள்களாக வெயிலால் பாதிக்கப்பட்ட நிலையில், தற்போது அந்த வெப்ப அலை முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த மூன்று நாள்களாக 32 பாகை செல்சியஸ் அல்லது அதற்கு அதிகமாகப் பதிவான வெப்பநிலை குறைந்ததால், கனடாவின் சுற்றுச் சூழல் நிறுவனம் வெளியிட்ட வெப்ப எச்சரிக்கை தற்போது திரும்பப் பெறப்பட்டுள்ளது.

புதன்கிழமையிலும் வெப்பம் மீளக் குறைந்தாலும், 29°C வரை வெப்பநிலை இருக்கலாம். ஈரப்பதத்தை உள்ளடக்கிய நிலையில் உணரப்படும் வெப்பநிலை சுமார் 34 பாகை செல்சியஸாக இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

வாரம் முழுவதும் வெப்பநிலை மேலும் குறைந்து, வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முறையே 22 பாகை மற்றும் 26 பாகை செல்சியஸாக இருக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மேலும், இந்த வார இறுதியில் சில மழை நேரங்கள் இருக்கும் வாய்ப்பு உள்ளது. வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மழை பெய்யக்கூடும் என சுற்றுச்சூழல் கனடா அறிவித்துள்ளது.

இவற்றையடுத்து ஞாயிற்றுக்கிழமையன்று சூரிய ஒளியுடன் கூடிய வானிலை திரும்பும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்று வெப்பநிலை மீண்டும் 29 பாகை செல்சியஸாக இருக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.




# பாதுகாப்புச் செலவுகளை 5 வீதமாக உயர்த்தும் கனடா

நாட்டின் பாதுகாப்பு செலவுகளை 2035 இற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 வீதமாக உயர்த்தும் என கனடா உறுதியளித்துள்ளது.

நேட்டோ கூட்டமைப்பின் தலைவர்கள் கூட்டத்தில் கனடா பிரதமர் மார்க் கார்னி இந்த உறுதிமொழியை வெளியிட்டுள்ளார்.

இது ஆண்டுக்கு அண்மையில் மட்டும் பில்லியன்கள் கணக்கில் கூடுதல் செலவாகும் என கணிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த 32 நேட்டோ உறுப்பினர்களும் நெதர்லாந்தின் ஹேக் நகரத்தில் நடந்த கூட்டத்தில் இதே உறுதிமொழியை வழங்கியுள்ளனர்.

இந்த 5 வீத செலவுக்கேட்டில் 3.5 வீதம் முக்கியமான பாதுகாப்பு தேவைகளுக்காக போர் விமானங்கள், ஆயுதங்கள் உள்ளிட்டவைகளுக்கு செலவிடப்படும். மீதமுள்ள 1.5 வீத பாதுகாப்பு தொடர்பான மற்ற முதலீடுகளுக்கு, குறிப்பாக உள்கட்டமைப்புக்கு, பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"உலகம் இப்போது மிகவும் ஆபத்தானதும் பிளவுபட்டதுமானதாக உள்ளது. கனடா தனது இறையாட்சியையும், நலன்களையும், கூட்டாளிகளையும் பாதுகாப்பதற்காக பாதுகாப்பு மையங்களை பலப்படுத்த வேண்டியது அவசியம்." என பிரதமர் கார்னி தெரிவித்துள்ளார்.




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

ஷெல்பேர்ன் அருகே வொல்க்ஸ்வாகன் ஜெட்டா மற்றும் ஃபோர்ட் எப்-150 பிக்கப் வாகனம் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டது.

மோதலையடுத்து ஃபோர்ட் வாகனம் முழுமையாக தீப்பற்றியது. வொல்க்ஸ்வாகன் வாகனமும் தீவிர சேதமடைந்த நிலையில் மீட்புப் பணியாளர்கள் சம்பவ இடத்தை அடைந்தனர்.

இந்த சம்பவத்தில் 42 வயதான பெண்ணும் 32 வயதான ஆணும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்திற்கான காரணங்களை ஆராய நோவா ஸ்கோஷியா பொது பணித்துறை மற்றும் தொழிலாளர் துறை அதிகாரிகள், பொலிஸாருடன் இணைந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தொழில்துறையில் பயன்படுத்தப்பட்ட வாகனம் இதில் தொடர்புடையதால், தொழிலாளர் துறையும் இணைந்து விசாரிக்கின்றது.

சம்பவத்தையடுத்து அதிவேக நெடுஞ்சாலை பல மணி நேரமாக மூடப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் நைஜீரிய பிரஜைக்கு 76 வருடங்கள் சிறை தண்டனை



கனடாவில் நைஜீரிய பிரஜை ஒருவருக்கு 76 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறுவன் ஒருவனை, இணைய வழியில் பாலியல் தொந்தரவு செய்ததாகவும் மிரட்டியதாகவும் குற்றம் சுமத்தி மேற்படி நபர் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுவன் தற்கொலை செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரியில் வசித்த ராபின் ஜஞ்சுவா என்ற சிறுவன், தனது இன்ஸ்டாகிராம் கணக்கின் ஊடாக தொடர்பு ஏற்படுத்தி துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவனுடன் தொடர்பு கொண்டு அவரின் அந்தரங்கப் புகைப்படங்களை பெற்றுக்கொண்டு அதனை வைத்துக் கொண்டு பணம் கேட்டு மிரட்டியதாகவும் இதனால் பாதிக்கப்பட்ட சிறுவன் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இச்சம்பவத்திற்கான நீண்ட மற்றும் சிக்கலான சர்வதேச விசாரணையின் பின், நைஜீரியாவின் ஒலுகேயே அடேடாயோ ஒலாலேக்கான் என்பவருக்கு 76 வருடங்கள் சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது.



# கனடாவின் தொலைத்தொடர்பு அமைப்புகள் மீது சைபர் தாக்குதல்

கனடாவில் தொலைத்தொடர்பு அமைப்புகளை சீன ஹேக்கர்கள் தாக்கியுள்ளனர் என எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

கனடா மற்றும் அமெரிக்காவின் சைபர் பாதுகாப்பு நிறுவனங்கள் கூட்டு எச்சரிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

அதில், சீன அரச ஆதரவு பெற்ற ஹேக்கர்கள் கனடாவின் தொலைத் தொடர்பு துறையை குறிவைத்துள்ளனர்.

Canadian Centre for Cyber Security மற்றும் FBI இணைந்து வெளியிட்ட அறிக்கையில், Salt Typhoon என்ற ஹேக்கர் குழு கனடாவின் முக்கிய தொலைத்தொடர்பு நிறுவன உபகரணங்களில் மூன்று கருவிகளை முறைகேடாகப் பயன்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த Salt Typhoon குழு, சீன அரசுடன் நேரடியாக தொடர்புடையது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர்களது செயற்பாடுகள் தொலைத்தொடர்பு துறையை தாண்டி, பல்வேறு முக்கிய கட்டமைப்புகளையும் பாதிப்பதாக அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சைபர் மையம் கூறுகையில்,

“இந்த தாக்குதல்களுக்கு சீன அரசின் ஆதரவு உறுதி செய்யப்படுகிறது, மேலும் இது தொடர்ந்து அதிகரிக்கக்கூடிய அபாயமாகவும் உள்ளது.” என தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், பீஜிங் இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளது. ஆனால், கடந்த ஜனவரியில் அமெரிக்கா, ஒரு சீன நிறுவனத்துக்கு எதிராக தடையையும், சீன உளவு அமைச்சையும் குற்றம் சாட்டி நடவடிக்கை எடுத்தது குறிப்பிடத்தக்கது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில், கனடாவின் தொலைத்தொடர்பு நிறுவனங்களை இத்தகைய ஹேக்கர்கள் தொடர்ந்து குறிவைக்க வாய்ப்பு அதிகம் என கணிக்கப்பட்டுள்ளது.